# தமிழ் / TAMIL

## (கட்டாயத்தாள்) / (Compulsory)

காலஅளவு : **மூன்று** மணி நேரம்
*Time Allowed : **Three** Hours*

மொத்த மதிப்பெண்கள் : **300**
*Maximum Marks : **300***

## வினாத்தாளுக்கான விதிமுறைகள்

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும் :**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

வினா/வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.

விடைகள் ***தமிழில் (தமிழ் எழுத்தில்)*** மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.

எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி/பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கேக் கோடு இடவும்.

munotes.in

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*All questions are to be attempted.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL (Tamil script)** unless otherwise directed in the question.*

*Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.*

*Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

**Q1. பின்வருவனற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை வரைக.** ***100***

(a) புதுப்பிக்கும் ஆற்றல் : வாய்ப்புகளும் சவால்களும்

(b) தகவல் தொடர்புப்புரட்சியின் சிறப்புகள்

(c) விளையாட்டுத்துறையில் வணிகமயமாதலின் பெருக்கம்

(d) உடல்நலத்தில் உணவுப்பழக்கத்தின் விளைவு

**Q2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும் சரியாகவும் சுருக்கமாகவும் விடை எழுதுக.** ***12×5=60***

மிகப்பெரும் அளவிலான தரவுத்தகவல்களின் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு காலனிய ஆட்சி இருந்தது. தங்களின் வணிக உறவுகளை வரன்முறைப் படுத்துவதற்காக வணிகச்செயல்பாடுகள் பற்றிய விரிவான தகவல் பதிவுகளை ஆங்கிலேயர் வைத்திருந்தார்கள். அவர்கள் வளரும் நகரங்களின் வாழ்வியல் படிநிலைகளை, திசைப்போக்குகளைப் பிடியில் வைத்திருக்க வழக்கமான புள்ளி விவர அளவீடு, புள்ளி விவரத்தொகுப்பு மற்றும் பல்வேறு அலுவலக அறிக்கைகளைப் பிரசுரித்தார்கள்.

காலனிய அரசு தொடக்க ஆட்சியாண்டிலிருந்து புவியியல் வரைபடங்களை உருவாக்குவதில் கவனமாக இருந்தது. அந்தஅரசு சரியான வரைபடங்கள் என்பது நில எல்லைகளையும், நில அமைப்பையும் புரிந்துகொள்ளத் தேவையானவை என்று நம்பியது. இந்த அறிவு பல்வேறு பகுதிகளைச் சிறப்பாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவியது. நகரங்கள் வளரத் தொடங்கிய போது, நகரங்களின் வளர்ச்சியைத் திட்ட மிடுவதற்கு மட்டுமன்றி, வணிகவளர்ச்சிக்கும் ஒருங்கிணைந்த நிர்வாக அதிகாரத்திற்கும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. நகர வரைபடங்கள் மலைகளின் இருப்பிடங்களையும், ஆறுகளையும், வனங்களையும்

நமக்குத்தெரிவிக்கின்றன. இந்த வரைபடங்கள் இராணுவப் பயன்பாட்டிற்குத் திட்டவரையறை செய்ய மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன. மற்றொருபுறம், அந்த வரைபடங்கள் மலைத்தொடர்களின் இடங்கள், வீடுகளின் நெருக்கம் மற்றும் தரம், சாலைகளின் நிலை ஆகியவற்றைக் காட்டுகின்றன. அவை வணிக வாய்ப்புகளை அளவிடவும், வரி விதிப்புகளைத் திட்டமிடவும் பயன்படுகின்றன.

ஆங்கிலேயர் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வரன்முறைப்படுத்தப்பட்ட ஆண்டு வரிவிதிப்பின் மூலம் நகரங்களை நிர்வகிக்க, நிதியை உயர்த்த முயன்றனர். முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற இந்தியப் பிரதிநிதிகளிடம் சில பொறுப்புகளை ஒப்படைத்தனர். மக்கள் பிரதிநிதித்துவப் பங்களிப்புடன் நகராட்சி போன்ற நிறுவனங்களில் தேவையான நீர் வழங்குதல் சாக்கடை அமைத்தல், சாலை அமைத்தல், பொதுமக்கள் உடல் நலம் முதலான சேவைகளை ஆங்கிலேயர் செய்தார்கள். நகராட்சிப் பதிவேட்டு அறைகளில் புதிய வகையான பதிவுகள் நகராட்சி நிர்வாகச் செயல்பாடுகளைப்பற்றி உருவாக்கி வைக்கப்பட்டுள்ளன.

நகரங்களின் வளர்ச்சி கணக்கீடுகளால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் நடுவில் பல உள்ளூர் புள்ளிவிவரக் கணக்கெடுப்புகள் வேறுபட்ட ஆட்சிப்பகுதிளில் நிகழ்த்தப்பட்டன. இந்திய அளவிலான முதல் கணக்கெடுப்பு 1872-இல் முயற்சிக்கப்பட்டது. அதன்பிறகு 1881 முதல் பத்தாண்டுகளுக்கு ஒரு முறையிலான கணக்கெடுப்பு தொடர்ந்து நடைமுறைக்கு வந்தது. இந்தக் கணக்கெடுப்புத் தரவுகள் இந்தியாவில் நகரமயமாதலை ஆராய்வதற்கு மதிப்பிட முடியாத மூலங்களாக இருக்கின்றன.

munotes.in

அந்தப் பதிவேடுகளைப் பார்க்கும்போது, வரலாற்று மாறுதல்களை அளவிடுவதற்கு மிகக்கடுமையான தரவுகளாக அவை நமக்குத் தோன்றுகின்றன. நோய், இறப்புகுறித்த அட்டவணைகள், வயது, பாலினம், சாதி, தொழில் குறித்த மக்களின் புள்ளி விவரப் பதிவுகள் முடிவில்லாப் பக்கங்களாக உள்ளன. அவை மிகப் பெரும் எண்ணிக்கையிலான தரவுகளைத் தந்து உண்மைத் தகவலின் மீது மாயத்தோற்றத்தை உருவாக்குகின்றன. எப்படியிருந்த போதிலும் வரலாற்றாளர் மிகப்பெரும் எண்ணிக்கையிலான தரவுகள் தவறாக வழிநடத்தக்கூடும் என்று அறிவார்கள். மிகப்பெரும் எண்ணிக்கையிலான தரவுகளை நாம் பயன்படுத்தும் முன்பு அந்தத் தரவுகளைத் தொகுத்தவர்கள் யாரென்றும், அது ஏன் என்றும், எப்படித் தொகுத்தார்கள் என்றும் புரிந்து கொள்வது தேவையாகும். என்ன அளவிடப் பெற்றது என்றும், என்ன அளவிடப் பெறவில்லை என்றும் நாம் மேலும் தெரிந்துகொள்வது தேவையானது.

munotes.in

(a) காலனி ஆட்சியை நடத்துவதில் தரவுகளின் முக்கியத்துவம் என்னவாக இருந்தது ? *12*

(b) காலனி ஆட்சியாளர்களுக்கு வரைபடங்கள் முக்கியமாக இருந்தது ஏன் ? *12*

(c) காலனியப் பதிவேடுகள் வழி நகரமயமாதல் எப்படி ஆராயப் படவேண்டும் ? *12*

(d) தரவுகள் எப்போதும் கபடமற்றவையாக இல்லை என்று வரலாற்றாளர்கள் ஏன் நம்புகிறார்கள் ? *12*

(e) காலனி ஆட்சியாளர்களின் வரிக்கொள்கை என்னவாக இருந்தது ? *12*

**Q3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை.** *60*

'வளர்ச்சி' என்ற சொல் குறிப்பிட்ட சமூகத்தின் நிலையை விளக்கவும், மாறுதல் முறைகளை மக்கள் அனுபவித்ததை விளக்கவும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. மனித சமூகங்களுக்கும், அவற்றின் உயிரியல், இயற்பியல் சூழல்களுக்கும் இடையிலான ஊடாட்டஉறவு சமூகங்களின் நிலையை மனித வரலாற்றின் நீண்ட காலத்தில் பெரும்பாலும் தீர்மானிக்கிறது. மனித இனத்திற்கும் அதன் சுற்றுச் சூழலுக்கும் இடையிலான ஊடாட்ட உறவுமுறை சமூகத்தால் வளர்க்கப் பட்ட தொழில் நுட்பங்கள் மற்றும் நிறுவனங்களின் அளவைச் சார்ந்திருக்கிறது. அதே நேரத்தில், தொழில்துட்பம் மற்றும் நிறுவனங்கள் மனிதனுக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையிலான படிநிலை வளர்ச்சிக்கு உதவுகின்றன. இந்தத் தூண்டுதல் தொழில்நுட்ப வளர்ச்சியை உருவாக்கவும், முடுக்கிவிடவும் நிறுவனங்களின் உருவாக்கத்திற்கும் மாற்றத்திற்கும் உதவுகிறது. இதனால் வளர்ச்சி என்பது, பொருளாதாரம், சமூகம், சுற்றுச் சூழல் முதலானவற்றின் நேர்மறையான மற்றும் மாற்ற இயலாத பல பரிமாணங்களிலான கருத்தியலாகவும் இருக்கிறது.

வளர்ச்சி என்ற கருத்தியல் 20ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் செயலிலும், பரிணமித்தலிலும் இருந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய காலத்தில் வளர்ச்சி என்ற கருத்தியல் பொருளாதார வளர்ச்சி என்ற ஒரே

munotes.in

பொருண்மையில் இருந்தது. அந்தப் பொருளாதார வளர்ச்சி என்பது, பொருளியல் வளர்ச்சியில் மொத்த தேசிய உற்பத்தியில் தனிநபர் வருமானமாகவும், தனிநபர் நுகர்வாகவும் இருக்கிறது. ஆனால் உயர் பொருளாதார வளர்ச்சியைப் பெற்றிருந்த போதிலும் மிகுந்த வறுமையை நாடுகள் அனுபவித்தன. சமமற்ற பகிர்வின் காரணமாக இது நிகழ்ந்தது. எனவே, 1970களில் 'மறுபகிர்வுடன் வளர்ச்சி' 'வளர்ச்சி மற்றும் நேர்மை' என்பன போன்ற தொடர்கள் வளர்ச்சி என்பதன் வரையறையில் இணைக்கப்பட்டன. 'மறுபகிர்வு மற்றும் நேர்மை' என்பதோடு தொடர்புடைய வினாக்களைப் பயன் படுத்தும்போது, வளர்ச்சி பற்றிய கருத்தியல் பொருளாதார அடுக்குகளை மட்டும் குறிப்பதில்லை. அது நலவாழ்வு மேம்பாடு, மக்களின் வாழ்வியல் தரம், உடல்நலம், கல்வி, வாய்ப்புகளில் சமத்துவம், அரசியல் உரிமை, குடி உரிமை முதலானவற்றின் சிக்கல்களை உள்ளடக்கியது. 1980களில் வளர்ச்சி என்பது, சமூகத்தில் அனைவருக்குமான சமூக, பொருளியல், நல்வாழ்வு பரவுவதை உள்ளடக்கமாகக் கொண்டு பரிணமித்தது.

மேற்கத்திய உலகில் 1960-இன் பிற்பகுதியில் நிலைபேறான வளர்ச்சி பற்றிய கருத்தியல் ஒரு பொது எழுச்சியாக, சுற்றுச்சூழல் குறித்த சிக்கல்களில் விழிப்புணர்வாகப் பரிணமித்தது. இது சுற்றுச்சூழலின் மீது தொழில் துறையின் வளர்ச்சி விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தியது குறித்த மக்கள் கருத்துகளைப் பிரதிபலித்தது.

உலக சமுதாயத்தின் சுற்றுச்சூழல் அக்கறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக, ஐக்கிய நாட்டு அவை நார்வே பிரதமர் குரோ ஹார்லெம் புருண்ட்லேண்ட் தலைமையில், உலகச்சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி ஆணையத்தைத் (உ.சு.வ.ஆ.) தோற்றுவித்தது. அந்த ஆணையம் 'நமது பொது எதிர்காலம்' என்ற தலைப்பிலான அறிக்கையை 1987-இல் அளித்தது. அது 'புருண்ட்லேண்ட் அறிக்கை' என்றும் அழைக்கப் படுகிறது. உ.சு.வ.ஆ. எளிய வெளிப்படையான பெருவாரியாகப் பயன்படுத்துகின்ற வரையறையைத் தந்துள்ளது. இந்த அறிக்கை நிலைபேறான வளர்ச்சி என்பது, "எதிர்காலத் தலைமுறை தமது சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதைக் கருத்தில் கொள்ளாமல் சமகாலத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வது" என்று கருதப்படுவதாக வரையறுக்கிறது. *(292 சொற்கள்)*

**Q4. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுக. *20***

பிரேம்சந்த், கதைகள் நம்மைச் சுற்றிச் சிதறிக் கிடக்கின்றன என்று சொல்கிறார். அக்கதைகளைக் கைப்பற்றுவது கேள்வியாக இருக்கிறது. அது அவ்வாறு இருப்பதற்கான காரணம் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொன்றும் தனக்கான வாழ்வியலைப் பெற்றிருப்பதும் மற்றவற்றிலிருந்து வேறுபட்டிருப்பதும் ஆகும். அது ஒவ்வொன்றும் தொடக்கம்,

வளர்ச்சி பிறகு முடிவுகளையும் பெற்றிருக்கிறது. ஒவ்வொருவரும் ஒரு அல்லது மற்ற கதைகளைக் கொண்டிருக்கின்றனர். ஒரு மனிதன் சரியான ஒற்றுமையைப் பிறருடன் கொண்டிருக்க முடியாது. ஒருவரின் வாழ்வியல் கதை மற்ற எவருடனும் பொருந்திப் போகாது.

தன் சொந்தக் கதையை எழுத முடியாதவர் என்று எந்த ஒருவரும் இல்லை. என் சுயவரலாறு என் வாழ்வின் கதையாகும். இந்தக் கதை என்னோடு மட்டும் தொடர்புடையது, என் வாழ்வு விரிந்து மற்றவர்களின் வாழ்வியலைத் தொடுகிறது. அது அவர்களின் கதையாகச் சிறப்பாக இருக்கிறது. என் வாழ்வின்விரிவாக்கம் என்பது என் காலத்தின், சமூகத்தின், குழுக்களின் பிரதிநிதித்துவமாக இருக்கிறது. அது அவைகளின் விரிவாக்கமாக உள்ளது. கதையாக எழுத எல்லா மனிதர்களின் வாழ்வு போதுமானது.

நீ ஒரு பேனாவை எடுத்துக்கொண்டு ஒரு துண்டுத்தாளின் மீது எதையாவது எழுதத்தொடங்கு. தன் வாழ்விலிருந்து ஒருவர் எழுதத் தொடங்குவது மிகச் சிறப்பானதாக இருக்கிறது. சிறுவயதிலிருந்து நிகழ்ந்த ஒவ்வொன்றிற்கும் சென்று, தகுதியானவற்றைக் குலுக்கி எடுத்து எழுது. சுயவரலாறு எதுவோ, அது இதுவாக இருக்கிறது சுயவரலாற்றின் முதல் நிபந்தனை ஒவ்வொன்றையும் வெளிப்படையாகவும் உண்மையாகவும் கூறுவதாகும்.

இது மேலும் பயிற்சியைத் தேவையாகக் கொண்டது; அறவியல் ஊக்கத்தைக் தேவையாகக் கொண்டது. முழு சுய வரலாறாக இல்லை என்றாலும் குறைந்தது நினைவுக்குறிப்புகள் அல்லது நாட்குறிப்புகள் எழுதப்படலாம். பல நாட்களுக்கான மற்றும் ஆண்டுகளுக்கான நாட்குறிப்புச் சுய வரலாற்றை உருவாக்கும்.

**Q5. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க.** *20*

Socrates was one of the celebrated Greek thinkers who became very influential in the development of Greek philosophy in particular and Western philosophy in general.

Socrates tried to bring radical changes in the society. But his attempts in the social field were not accepted and appreciated by the authorities. But convinced of his principles Socrates continued his efforts. The authorities considered him as a threat to their existence and as a result he was arrested and sent to prison. Later, he was given capital punishment because he was frank and outspoken. When he received the news of the death penalty he was not at all shaken.

It confused all the officials and even Socrates' own disciples because they had never seen a person accepting the news of his death penalty with a smiling face. When asked why so, he replied, "I have been preparing for death all my life. I have never done anything wrong to any man. That is why I am able to accept even death with a smiling face."

In his use of critical reasoning, by his unwavering commitment to truth and through the vivid example of his own life, Socrates set the standard for all subsequent Western philosophy.

munotes.in

**Q6.** **(a)** **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக :** *2×5=10*

(i) கருக்கல் *2*

(ii) வரையறை *2*

(iii) அள்ளிவீசு *2*

(iv) சீர் *2*

(v) மறம் *2*

**(b)** **பின்வரும் இணைச் சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படுமாறு ஏற்ற சொற்றொடர்களில் அமைத்து எழுதுக :** *2×5=10*

(i) பொருப்பு – பொறுப்பு *2*

(ii) பனி – பணி *2*

(iii) கழை – களை *2*

(iv) கலம் – களம் *2*

(v) குரை – குறை *2*

**(c)** **பிரித்து எழுதுக :** *1×5=5*

(i) அரவணைப்பு *1*

(ii) கற்றூண் *1*

(iii) மட்பாண்டம் *1*

(iv) மரவேர் *1*

(v) தூரத்துச் சொந்தம் *1*

munotes.in

**(d)** **எதிர்ச்சொற்கள் தருக :** *1×5=5*

(i) கடினம் *1*

(ii) இன்பம் *1*

(iii) தோற்றம் *1*

(iv) நட்பு *1*

(v) இணைப்பு *1*

**(e)** **எதிர்மறை வாக்கியமாக மாற்றுக :** *1×5=5*

(i) கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும். *1*

(ii) தொல்காப்பியம் முதலில் எழுதப்பட்டது. *1*

(iii) கரும்பை எல்லாரும் விரும்பி உண்பர். *1*

(iv) வாழை ஒரு செடி. *1*

(v) மாணவன் பள்ளிக்கு ஒழுங்காக வருகிறான். *1*

munotes.in

**(f)** **பிழை நீக்கி எழுதுக :** *1×5=5*

(i) கோபாலன் பத்து மாடு வாங்கினான். *1*

(ii) கரம் சிரம் புரம் நீட்டாதீர். *1*

(iii) சிறுவன் பள்ளிக்கு சென்றான். *1*

(iv) கடவுள் தூண் இருக்கிறார். *1*

(v) அப்பா வந்தது. *1*